**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 209/2018 C/W OS 210/2018 C/W OS 262/2016**

நாள் 20.01.2026

DW1 – K.லோகநாதன்

த/பெ – காளிமுத்து

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of January 2026)**

**குறுக்கு விசாரணை**

1. நான் திருப்பூரில் AKR இண்டஸ்ட்ரீஸ் என்ற பெயரில் பனியன் கம்பெனி வைத்து 25 ஆண்டு காலமாக நடத்தி வருகிறேன். தாவா சொத்திற்கு தென்புறத்தில் எனக்கு பாத்தியப்பட்ட வேறு 4 ஏக்கர் சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த 4 ஏக்கர் சொத்திற்கு எனது பெயரில் உள்ள கிரைய பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 13.11.2014–ம் தேதியிட்ட **பதிவு கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்பட்டது. வா.சா.ஆ.23–ல் உள்ள 4 ஏக்கர் சொத்தை ரங்கசாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றேன். அந்த ரங்கசாமி இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதி சென்னிமலை கவுண்டரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 கிரைய ஆவணம் பதிவின் போது இணைத்து கொடுக்கப்பட்ட கணினி சிட்டாவின் வாதிகள் மற்றும் 4–ம் பிரதிவாதி பெயர் கூட்டுப்பட்டாதாரராக இருந்தது என்றால் அது தவறானது. வாதிகள் மற்றும் 4–ம் பிரதிவாதி ஆகியோர் தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்ததால் தான் அவர்கள் பெயரும் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

2. நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்காக வேண்டி சின்ன குட்டி என்பவரை எனது முகவராக நியமித்து எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் **13.08.2010–ம் தேதியிட்ட பதிவு பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த சின்ன குட்டி என்பவர் எனது மாமனார் ஆவார். தாவா சொத்தை எனது பெயரில் எனது மாமனார் முகவராக இருந்து கிரைய ஆவணம் ஏற்படுத்திய போது நான் தொழில் நிமித்தமாக பல்வேறு இடங்களுக்கு சென்றிருந்ததால் எனது மாமனார் சின்ன குட்டி மூலமாக கிரைய பதிவு செய்தேன். நான் பனியன் கம்பெனி வைத்து நடத்தி வருவதால் வங்கியில் கடன் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு கடன் வாங்கும் போது கடன் செக்யூரிட்டிக்காக கொடுக்கும் சொத்தின் ஆவணங்களை கொண்டு வழக்கறிஞர் மூலம் சட்ட கருத்துரை பெற வேண்டியது எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் மூல ஆவணங்களை நான் தான் படித்து பார்த்தேன். சொத்தின் மூல ஆவணங்கள், நீதிமன்றம் மூலம் கிடைத்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவைகளை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். தாவா சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக அந்த சொத்தின் ஆவணங்களை வழக்கறிஞரிடம் காண்பித்து சட்ட கருத்துரை பெற்று தான் கிரையம் வாங்கினேன்.

3. நான் தாவா சொத்தை கிரையம் பெறும் போது அ.வ.எண்.209, 210/2018 வழக்குகளானது அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.69/2011 மற்றும் அ.வ.எண்.274/2012 வழக்குகளான நிலுவையில் இருந்து வந்தது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. மேற்படி வீதம் வழக்குகள் நிலுவையில் இருப்பதை

மறைத்து தான் எனக்கு நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரும் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த இருவரும் மோசடியாக எனக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுத்து விட்டதாக சொல்லி அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா? என்றால் நியாயமான கிரையம் என்பதால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. வாதிகள் தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பதையும், வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்பதையும் தெரிந்து தான் மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கடந்த 03.04.2006–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி வாதிகளுக்கும், 4–ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 1–ம் பிரதிவாதி ரத்து செய்து விட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தையும், அதன் ரத்து ஆவணத்தையும் நான் படித்து பார்த்து விட்டு தான் சொத்தை கிரையம் பெற்றேன் என்றால், நான் அந்த ஆவணங்களை பார்க்கவே இல்லை. கடந்த 03.04.2006–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தாவா சொத்து வாதிகளுக்கும், 4–ம் பிரதிவாதிக்கும் தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை வாதிகளும், 4–ம் பிரதிவாதியும் அவர்களது தகப்பனாரான 1–ம் பிரதிவாதியுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று ரத்து ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் பேரில் வாதிகள் மற்றும் 4–ம் பிரதிவாதி ஆகியோரின் பெயரும் கூட்டுப்பட்டாதாரராக சேர்க்கப்பட்டுள்ளார்கள்

என்றும், அந்த பட்டாவை காண்பித்து தான் நான் ரங்கசாமியிடம் இருந்து வா.சா.ஆ.23–ல் கண்ட 4 ஏக்கர் சொத்தையே கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. அ.வ.எண்.344/2008– என்ற வழக்கை நல்லி சண்முகசுந்தரம் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் கோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டுள்ள விபரம் மட்டும் தான் எனக்கு தெரியும். அந்த வழக்கில் வாதிகளையோ, 4–ம் பிரதிவாதியும் கட்சி சேர்க்காமல் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 03.04.2006–ம் தேதியிலேயே வாதிகளும், 4–ம் பிரதிவாதியும் தாவா சொத்தின் உரிமையாளர்கள் ஆகி விட்டார்கள் என்றும், ஆனால் அதை மறைத்து தான் மேற்படி அ.வ.எண்.344/2008 வழக்கு 1–ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் அந்த தீர்ப்பு வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், விஸ்வலிங்கசாமி அ.வ.எண்.266/2008 என்ற வழக்கையும் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக தீர்ப்பு பெற்று நீதிமன்றம் மூலம் கிரைய ஆவணம் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கிலும் வாதிகளையும் 4–ம் பிரதிவாதியையும் கட்சி சேர்க்கப்படாத நிலையில் 1–ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் வழக்கை தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக பெற்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிகளையும், 4–ம் பிரதிவாதியையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர் பெயரில் நீதிமன்றம் மூலம் ஏற்பட்ட கிரைய ஆவணங்களின் பேரில் தாவா சொத்திற்கு அவர்கள் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நீதிமன்றம் மூலம் அவர்கள்

இருவரும் கிரையம் பெற்றிருந்தாலும், அந்த கிரைய ஆவணத்தின் பேரில் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்திலேயே இல்லாத நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோரிடமிருந்து நான் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்டுள்ள 10.11.2011–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.3–ல் 1–ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன் 2–ம் பிரதிவாதி, மகள் 4–ம் பிரதிவாதி ஆகியோர் இன்னாரென்று நிரூபித்தவர்களாகவும், சம்மதம் தெரிவித்தவர்களாகவும் இருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெறும் போது 1–ம் பிரதிவாதியும், அவரது மகன் மற்றும் மகளான 2,4 பிரதிவாதிகளும் அங்கு வந்திருந்தார்கள் அதனால், அவர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கப்பெற்றது. அப்போது, வாதிகள் இருவரும் அங்கு வந்ததிருந்தார்களா? என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் தான் அவர்களுக்கு தெரியாமல் நான் கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்து சம்பந்தமாக வழக்குகள் இருந்து வருவதாலும், தாவா சொத்தில் வில்லங்கம் இருந்து வருவதால் தான் 1–ம் பிரதிவாதியையும், அவரது மகன் மகளான 2,4 பிரதிவாதிகளை அழைத்து பத்திரத்தில் சம்மத கையெழுத்து பெற்றுள்ளேன் என்றும், பின்னிட்டு வாதிகளிடமும் ஆவணம் எழுதி பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு மத்தியில் எனக்கும், வாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது

என்றால் வாதிகள் தான் தாவா சொத்தில் உள்ள எனது அனுபவத்தில் இடையூறு செய்ததால் அது சம்பந்தமாக அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்திருந்தேன். அதேபோல் வாதிகள் என் மீது கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.821/2015 என்று பிரிவுகள் 147, 447, 427, 506 (2) இதச படி முதல் தகவல் அறிக்கையும் என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அந்த வழக்கை விசாரித்து உண்மையில்லை என்று முடிவு செய்து தள்ளுபடி செய்து விட்டார்கள். நான் கொடுத்த புகாரின் பேரில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் அவர்கள் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்கள். அ.வ.எண்.209/2018 வழக்கில் IA.723/2014 என்ற மனுவில் கடந்த 29.10.2014-ம் தேதியில் நல்லி சண்முகசுந்தரத்திற்கு எதிராக இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த இடைக்கால தடையுத்தரவானது நல்லி சண்முகசுந்தரத்திடம் இருந்து கிரையம் பெற்ற என்னையும் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக பொய் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ளதை தெரிந்து வாதிகள் எனக்கு எதிராகவும் அ.வ.எண்.516/2014 வழக்காக தாக்கல் செய்து அந்த வழக்கு அ.வ.எண்.262/2016 வழக்காக இந்த நீதிமன்றத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான், மற்ற இரண்டு வழக்குளிலும் மனு தாக்கல் செய்து நானாகவே கட்சி சேர்ந்துள்ளேன்.

6. நான் தாவா சொத்தை கிரையம் பெற்ற பிறகு நான் அவ.எண்.100/2023 என்ற வழக்கை அவிநாசி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த

வழக்குகளின் வாதிகள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த **அ.வ.எண்.100/2023 வழக்கின் தாவா பிராது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.25 ஆகவும், பதிலுரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.26** ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. அந்த அ.வ.எண்.100/2023 வழக்கை இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண்.209, 210/2018 மற்றும் 262/2016 என்ற 3 வழக்குகளையும் மறைத்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த அ.வ.எண்.100/2023 வழக்கானது நிலுவையில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர்கள் பெயரில் சப்டிவிசன் எதுவும் ஏற்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 1—ம் பிரதிவாதி அவரது மகனான 2—ம் பிரதிவாதி குடிபோதைக்கு அடிமையாகி இருந்ததால் சொத்தை அழித்து விடுவார் என்று பயந்து 1—ம் பிரதிவாதி அவருடைய மகள்களான வாதிகள் மற்றும் 4—ம் பிரதிவாதி ஆகியோர் பெயரில் 03.04.2006—ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1—ம் பிரதிவாதி தாவா சொத்தை அவிநாசி கூட்டுறவு சொசைட்டியில் அடமான கடன் பெற்று அதை திருப்பி கட்டாமல் விட்டு விட்டதால் சொத்து ஏலத்திற்கு வந்தது என்றால் சரிதான். அந்த கடனை 1,2 வாதிகள் தான் அடைத்து சொத்தை மீட்டார்கள் என்றால் சரியல்ல. அதற்கு பிறகு தான் 1—ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதிகள் மற்றும் 4—ம் பிரதிவாதி ஆகியோருக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கடனை வாதிகள் திருப்பி செலுத்தியதற்கான ரசீதை வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வீதம் 1—ம் பிரதிவாதி வாதிகளுக்கும் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி

வைத்துள்ளதை தெரிந்து 2–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதியை அடித்து துன்புறுத்தி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று ஒருதலைபட்சமாக செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்பு தான் முன் தேதியிட்ட வெற்று முத்திரைத்தாளில் 1–ம் பிரதிவாதியிடம் கையொப்பம் பெற்று அதை வைத்து நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர் பதிவு பெறாத கிரைய ஒப்பந்தங்களை தயார் செய்து அதன்பேரில் வாதிகளை கட்சி சேர்க்காமல் 1,2–ம் பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக தீர்ப்பு பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா சொத்து செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அதனால், தாவா சொத்தை பொறுத்து நான் ஏற்படுத்திக்கொண்டுள்ள கிரைய பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அதனால், வாதிகள் 3 வழக்குகளிலும் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.01.20 16:45:47 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**